www.Padasalai.Net www.TrbTnpsc.com

T

# முழு ஆண்டு பொதுத் தேர்வு - 2025

## எட்டாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி சமூகஅறிவியல் மதிப்பெண்கள்: 100

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **10×1=10**

1) பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?
அ) நெதர்லாந்து (டச்சு) ஆ) போர்ச்சுகல் இ) பிரான்ஸ் ஈ) பிரிட்டன்

2) ஆங்கிலேயரால் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்படாத பகுதி எது?
அ) பம்பாய் ஆ) மதராஸ் இ) வங்காளம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

3) B.M. மலபாரி என்பவர் ஒரு
அ) ஆசிரியர் ஆ) மருத்துவர் இ) வழக்கறிஞர் ஈ) பத்திரிக்கையாளர்

4) கூற்று: ஆங்கிலேயர்கள் தங்கள் மாற்று தலைநகரங்களை மலைப்பாங்கான பகுதிகளில் அமைத்தனர்
காரணம்: அவர்கள் இந்தியாவில் கோடைகாலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர்.
அ) கூற்று சரி காரணம் தவறு
ஆ) கூற்று தவறு மற்றும் காரணம் சரி
இ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்குகிறது
ஈ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றை விளக்கவில்லை

5) புவி பெறும் ஆற்றல்
அ) நீரோட்டம் ஆ) மின்காந்த அலைகள் இ) அலைகள் ஈ) வெப்பம்

6) ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை ________
அ) கேப்பிளாங்கா ஆ) அகுல்காஸ்முனை இ) நன்னம்பிக்கைமுனை ஈ) கேப்டவுன்

7) தேசிய மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1993 இ) 1978 ஈ) 1979

8) உச்சநீதிமன்றம் அமைந்துள்ள இடம்
அ) சண்டிகர் ஆ) பம்பாய் இ) கல்கத்தா ஈ) புதுதில்லி

9) வங்கிப்பணம் என்பது எது?
அ) காசோலை ஆ) வரைவு
இ) கடன் மற்றும் பற்று அட்டைகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

10) பொதுத்துறை ________ உடையது
அ) இலாபநோக்கம் ஆ) சேவை நோக்கம்
இ) ஊக வணிக நோக்கம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

**II.** கோடிட்ட இடத்தை நிரப்புக:- **5×1=5**

11) இரண்டாம் கர்நாடகப் போருக்கான முக்கியக் காரணம் ________
12) நகராட்சி உருவாவதற்குப் பொறுப்பாக இருந்தவர் ________
13) வெப்பமண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு ________ என அழைக்கப்படுகிறது.
14) மனித உரிமைகள் என்பது ________ உரிமைகள்
15) குடிமக்கள் மத்தியில் ________ மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது

**III.** பொருத்துக:- **5×1=5**

16) தவர்னியர் - செல்வச்சுரண்டல் கோட்பாடு
17) டாக்கா - காகித ஆலை
18) தாதாபாய் நௌரோஜி - கைவினைஞர்
19) பாலிகன்ஜ் - மஸ்லின் துணி
20) ஸ்மித் - பிரெஞ்சு பயணி

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**IV.** சரியா/தவறா எனக் குறிப்பிடுக:- **5×1=5**

21) வாரன்ஹேஸ்டிங்ஸ் ஐந்தாண்டு நிலவரி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

22) வில்லியம் கோட்டை சென்னையில் அமைந்துள்ளது.

23) இயற்கை மணலுக்கு மாற்றாக கட்டுமான பணிகளுக்கு "செயற்கை மணல்" (M-sand) பயன்படுகிறது.

24) மொகலாயப் பேரரசர் அக்பர் சமயச்சகிப்புத்தன்மை கொள்கையைப் பின்பற்றினார்

25) இந்தியாவில் மிகப்பெரிய நீதிமன்றம் அலகாபாத் நீதிமன்றம் ஆகும்.

**V.** வேறுபடுத்துக:- **2×2=4**

26) கோள்காற்று மற்றும் பருவகாலக் காற்றுகள்

27) நில அதிர்வு மற்றும் சுனாமி

**VI.** காரணம் கூறுக:- (இரண்டு மட்டும்) **3×2=6**

28) தீப்பாறைகள் எரிமலை பகுதிகளில் காணப்படுகிறது

29) புவியில் நன்னீர் குறைவாக உள்ளது.

30) வெப்ப பாலைவனங்கள் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் அமைந்துள்ளன.

**VII.** சுருக்கமான விடையளி (பத்து மட்டும்):- **10×2=20**

31) வேலூர் கலகத்தின் விளைவுகளை எழுதுக.

32) இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு பற்றி சிறுகுறிப்பு தருக.

33) "சதி" பற்றி ஒரு குறிப்பு வரைக.

34) மண்ணின் வகைகளை கூறுக?

35) அபாயகரக் கழிவுகள் பற்றி குறிப்பு எழுதுக.

36) ஆப்பிரிக்கா "தாய் கண்டம்" என அழைக்கப்படுவது ஏன்?

37) முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?

38) ஏதேனும் நான்கு சாலை விதிகளை எழுதுக.

39) மக்கள் நீதிமன்றம் பற்றி குறிப்பு எழுதுக.

40) சேமிப்பு மற்றும் முதலீடு என்றால் என்ன?

41) சமுதாயத் தேவை என்றால் என்ன?

42) தனியார் துறை நிறுவனங்களில் ஏதேனும் மூன்றினைக் கூறுக?

**VIII.** விரிவான விடையளி (ஆறு மட்டும்):- **6×5=30**

43) இரண்டாம் கர்நாடகப் போர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

44) இந்தியா பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது எப்படி?

45) மழைப்பொழிவின் பல வடிவங்களைப் பற்றி விவரி.

46) தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகளை விளக்குக

47) ஒருவருக்கு எதன் அடிப்படையில் இந்தியக் குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது?

48) உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்புகளை விவரி.

49) பணத்தின் பணிகள் யாவை? அவற்றை விளக்குக

50) தனியார் துறையின் பணிகளைப் பற்றி எழுதுக.

**IX.** இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:- **10×1=10**

51) 1. கல்கத்தா 2. கொச்சின் 3. பிளாசி 4. வந்தவாசி 5. டெல்லி 6. மீரட் 7. பம்பாய் 8. மதுரை 9. அஸ்ஸாம் 10. குல்டி

**X.** உலக வரைபடத்தில் குறிக்கவும்:- **5×1=5**

52) 1. டோக்கியோ 2. இலத்தீன் அமெரிக்கா 3 மெக்சிகோ 4. இலண்டன் 5) கெய்ரோ

********

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com